**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.628/2026**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw1/Pw1 |
| Name | : வெங்கடேசன் |
| Father/Husband's Name | : குப்பன் |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 42 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02.06.2026.

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மதுவிலக்கு அமலாக்க பிரிவில் தலைமை காவலராக பணியாற்றுகிறேன். கடந்த 24.05.2023 ம் தேதி நான் செங்பல்பட்டு தாலுகா காவல் நிலையத்தில் தலைமை காவலரா பணியில் இருந்தபோது காலை 16.45 மணியளவில் சிறப்பு உதவி ஆய்வாளர் கார்த்திகேயன் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் கார்த்திகேயன் சிறப்பு உதவி ஆய்வாளர் தலைமையில் நானும் என்னுடன் நாகராஜ் காவலர் ஆகியோர் காலை 17.00 மணியளவில் தண்டுக்கரை சென்று கண்காணித்து கொண்டிருக்கும்போது அங்கிருந்த தகவலாளி அடையாளம் காட்ட ஆஜர் எதிரி அருள் த/பெ ஜோஷ்வா அவர் எங்களை பார்த்த உடன் ஓட ஆரம்பித்தார் அவரை மடக்கி பிடித்து

விசாரித்த போது முன்னுக்கு பின் முரணாக பதில் சொன்னதால் அவரை சோதனை செய்த போது அவர் பாக்கெட்டில் 50 கி கஞ்சா இருந்தது.

2. அதில் சிறிதளவு எடுத்து கொளுத்தி பார்த்த போது நெடியுடன் கூடிய வாசம் வந்ததால் அது கஞ்சா என்று உறுதி செய்தார். 17.15 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர்எதிரியை கைது செய்தார். பிறகு 17.30 மணிக்கு கைப்பற்றுதல் மகசர் எங்கள் முன்னிலையில் தயார் செய்து கைப்பற்றினார். அதில் நானும், நாகராஜீம் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான்.அந்த கைப்பற்றுதல் மகசர் **அதசா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18.30 மணியளவில் எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட பொருளுடன் காவல் நிலையம் வந்தோம். இது சம்மந்தமாக சிறப்பு உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார். முதல் தகவல் அறிக்கை சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்களால் பதிவு செய்யப்பட்டது.

<u>குறுக்கு விசாரணை</u>

1. நான் தாலுகா காவல் நிலையத்தில் 3 ஆண்டுகளாக பணியாற்றினேன். நான் தற்போது செங்கல்பட்டு மது விலக்கு அமலாக்க பிரிவில் பணியாற்றி வருகிறேன். செங்கல்பட்டு தாலுகா காவல் நிலையத்தில் பணி செய்த போது நான்கு எல்லைகளும் எனக்கு தெரியும். சிறப்பு உதவி ஆய்வாளர் கார்த்திகேயன் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் காவல் ஆய்வாளருக்கு தகவல் சொல்லி அவர் உத்தரவின் பேரில் செல்வதாக சிறப்பு உதவி ஆய்வாளர் என்னிடம் சொன்னார். அந்த சமயத்தில் காவல் ஆய்வாளர் பெயர் அசோகன். காவல் நிலையத்தில் இருந்து சம்பவ இடத்திற்கு 15 நிமிடத்தில் சென்றுவிட்டோம். சம்பவ இடம் செல்வதை குறித்து பொது நாட்குறிப்பில் சிறப்பு உதவி ஆய்வாளர் பதிவு செய்தார்.

2. சம்பவ இடம் குடியிருப்பு பகுதி மற்றும் ஆள் நடமாட்டம் இருக்கும் பகுதி என்றால் சரிதான். சம்பவ சாட்சிகளாக பொது மக்களை சாட்சியாக சேர்க்கப்பட்டார்களா என்றால் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் பொது மக்களை சாட்சியாக இருக்கும் படி அழைத்தார் ஆனால் யாரும் முன்வரவில்லை. கஞ்சாவை கைப்பற்றும் போது புகைப்படம் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. சிறப்பு உதவி ஆய்வாளர் உத்தரவின் பேரில் சம்பவ இடம் செல்லாமல் கைப்பற்றுதல் மகசரில் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டு விட்டு தற்போது தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu